"வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு நடைபெறுவதையொட்டி

# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி - மாவட்ட- மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் மகளிர் அணியினர் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திமுக நாடாளுமன்றக் குழு தலைவர், கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அறிவுறுத்தலின்படி, வருகின்ற 09.01.2026 வெள்ளிக்கிழமை, காலை 10.00 மணி அளவில், வடலூர் மங்கையர்கரசி திருமண மண்டபத்தில், "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" திமுக டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு சம்மந்தமாக, கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணியின் மாவட்ட- மாநகர- ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் தலைவர், துணை தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் மகளிர் அணியினர் ஆலோசனை கூட்டம் எனது தலைமையிலும், கழக மகளிர் அணி செயலாளர் ஹேலன்டேவிட்சன், மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ப.ராணி, மகளிர் அணி இணை செயலாளர் குமரிவிஜயக்குமர், மகளிர் தொண்டர் அணி இணை செயலாளர் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., டெல்டா மண்டல மகளிர் அணி பொறுப்பாளர் ரேகாபிரியதர்ஷினி, மகளிர் அணி துணை செயலாளர் ஆ.அங்கையர்கண்ணி, மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஸ்வரன் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

அது சமயம் இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட - மாநகர- நகர - பகுதி - பேரூர் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மகளிர் துணை செயலாளர்கள், முன்னாள் இந்நாள் மகளிர் உள்ளாட்சி பிரதிநிதிகள், மகளிர் மாநகர மேயர், பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், மண்டல குழு தலைவர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற மகளிர் உறுப்பினர்கள், முன்னாள் ஒன்றிய குழு தலைவர்கள், துணை தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், மாவட்ட ஒன்றிய குழு உறுப்பினர்கள் மற்றும் கழக மகளிர் அணியினர், மகளிர் தொண்டர் அணியினர் அனைவரும் தவறாமல் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:-

1. ஜனவரி 26 தஞ்சையில் நடைபெறும் வெல்லும் தமிழ்ப் பெண்கள் திமுக டெல்டா மண்டல மகளிர் மாநாடு,
2. திராவிட பொங்கல் மகளிர் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது சம்மந்தமாக.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.




கழக துணைப் பொதுச்செயலாளர் – நாடாளுமன்ற கழகக் குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தனது பிறந்த நாளையொட்டி அரசு வழக்கறிஞர் ஆர்.பி.முருகன் ராஜா ஏற்பாட்டில் வடசென்னை எண்ணூர் பகுதியைச் சார்ந்த மாற்றுத்திறனாளி பிரகாஷ் அவர்களுக்கு கனிமொழி கருணாநிதி அவர்கள் மூன்று சக்கர மோட்டார் சைக்கிளை வழங்கினார். உடன் வழக்கறிஞர் அணி சென்னை வடகிழக்கு மாவட்ட துணை தலைவர் திருமதி.ஷோபனா சுரேஷ், வழக்கறிஞர் பி.சுரேஷ், வேங்கை வாசல் மேனாள் சென்னை தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் மு.கா.கதிரவன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

திராவிட பொங்கல் திருநாளை முன்னிட்டு

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் கிரிக்கெட், கபடி, கால்பந்து, கேரம், கோலப்போட்டி மற்றும் மகளிர் கைப்பந்து விளையாட்டுப் போட்டிகள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்று திராவிட பொங்கல் திருநாளில் **சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர், துறைமுகம், எழும்பூர், திரு.வி.க.நகர், வில்லிவாக்கம், அம்பத்தூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் விளையாட்டு** போட்டிகள் விவரம்:

| நாள் / நேரம் | விளையாட்டு போட்டி | இடம் | தலைமை |
|---|---|---|---|
| 7.1.2026 காலை 9 மணி | கபடி | வில்லிவாக்கம் மேற்கு பகுதி, ராஜமங்கலம், ஐந்து விளக்கு அருகில் 94 ஆ வட்டம் | கூ.பீ.ஜெயின், பகுதி கழக செயலாளர் 8வது மண்டலக்குழுத் தலைவர் |
| 7.1.2026 காலை 9 மணி | கால்பந்து | துறைமுகம் கிழக்கு பகுதி, ஆசிர்வாதபுரம் மைதானம், பிராட்வே. | எஸ்.ராஜசேகர், பகுதி கழக செயலாளர் |
| 10.1.2026 காலை 8 மணி | ஆண்கள் கபடி | அம்பத்தூர் வடக்கு பகுதி, வார்டு 86, டாக்டர் அம்பேத்கர் திடல், அத்திப்பட்டு பெரிய காலனி ஆலமரம். | ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. பகுதி கழக செயலாளர் |
| 11.1.2026 காலை 8 மணி | கேரம் | திரு.வி.க.நகர் தெற்கு பகுதி, தயா சமூக நலகூடம் சத்தியவாணி முத்து நகர், ஒட்டேரி, சென்னை-12. | எம்.சாமிக்கண்ணு பகுதி கழக செயலாளர் |
| 11.1.2026 காலை 9 மணி | கால்பந்து | திரு.வி.க.நகர் வடக்கு பகுதி, ஜமாலியா கால்பந்து மைதானம், ஜமாலியா | செ.தமிழ்வேந்தன் பகுதி கழக செயலாளர் |
| 11.1.2026 காலை 9 மணி | கோலப்போட்டி | கொளத்தூர் மேற்கு பகுதி, காவேரி தெரு, ராஜோஜி நகர், வில்லிவாக்கம், சென்னை-49. | எ. நாகராஜன் பகுதி கழக செயலாளர் |
| 11.1.2026 காலை 9 மணி | மகளிர் கைப்பந்து | எழும்பூர் வடக்கு பகுதி, கண்ணப்பத்திடல் விளையாட்டு மைதானம் சூளை, ரவுண்டானா | சொ.வேலு பகுதி கழக செயலாளர் |
| 11.1.2026 காலை 9 மணி | கால்பந்து | எழும்பூர் தெற்கு பகுதி, நேவல் மருத்துவமனை சாலை விளையாட்டு திடல் (கால்நடை மருத்துவமனை எதிரில்) | வி.சுதாகர் பகுதி கழக செயலாளர் |
| 12.1.2026 காலை 9 மணி | மகளிர் கைப்பந்து | துறைமுகம் மேற்கு பகுதி, கன்னிகா பரமேஸ்வரி கல்லூரி வளாகம். | எஸ்.முரளி. பகுதி கழக செயலாளர். |
| 14.1.2026 மாலை 3 மணி | கோலப் போட்டி | அம்பத்தூர் கிழக்கு பகுதி, முத்தமிழ்நகர் வட்டம் 83ஆ | எம்.டி.ஆர்.நாகராஜ், பகுதி கழக செயலாளர். |
| 17.1.2026 18.1.2026 | கிரிக்கெட் | அம்பத்தூர் தெற்கு பகுதி, இளங்கோ நகர் மைதானம், முகப்பேர், | D.S.P.ராஜகோபால், பகுதி கழக செயலாளர் |
| 18.1.2026 காலை 9 மணி | கபடி | கொளத்தூர் கிழக்கு பகுதி. ஜவகர் நகர், 2 வது பிரதான சாலை | ஐசிஎப். வ.முரளிதரன், பகுதி கழக செயலாளர் |

மேற்கண்ட போட்டிகளில் அந்தந்த பகுதிக்குட்பட்ட வட்டங்களைச் சார்ந்த விளையாட்டு அணிகள் பங்கேற்று சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

ஆலந்தூர் தொகுதியில் தமிழர் திருநாள் 'திராவிட பொங்கல்' விழா:

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் - ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை- பொங்கல் பரிசு வழங்குகிறார்!

## கழகத்தினருக்கு ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் என். சந்திரன் எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, ஜன. 7

ஆலந்தூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர், 12-வது மண்டல குழு தலைவர் என். சந்திரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் சார்பில் தமிழர் திருநாள் திராவிட பொங்கலையொட்டி ஆலந்தூர் தொகுதியில் உள்ள ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை, பொங்கல் பரிசு பொருட்கள் வழங்கும் மாபெரும் விழா இன்று (7.1.2026) புதன்கிழமை மாலை 5 மணி அளவில் ஆலந்தூர் புது தெரு ஆர்.டி.ஓ. ஆபீஸ் அருகில் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் கழக இளைஞரணி செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கலந்துகொண்டு பொங்கல் பரிசு வழங்குகிறார்.

எனவே, ஆலந்தூர் தெற்கு பகுதிகுட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள்,மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள்,வட்ட நிர்வாகிகள், பகுதி-வட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், இளைஞரணியினர், மாணவரணியினர், மகளிரணியினர்,பாக முகவர்கள் (BLA-2), கழக தோழர்கள், கட்டாயம் இருவர்ண கழக கொடியுடன் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பான வரவேற்பு வழங்குமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு ஆலந்தூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர், 12-வது மண்டல குழு தலைவர் என். சந்திரன் தெரிவித்துள்ளார்.

# சென்னை வடகிழக்கு மாவட்ட பகுதி, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அறிவிப்பு!



சென்னை வடகிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக, ஒன்றிய கழக, பேரூர் கழக, செயலாளர்கள் ஆலோசனைக்கூட்டம் வரும் 07.01.2026 அன்று புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் மாதவரம் VRD நகரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் முன்னிலையில் நடைபெற உள்ளது. மேலும் இந்நிகழ்ச்சியில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர், மாதவரம் தொகுதி பார்வையாளர் டாக்டர்.ஜே.அருண் மற்றும் திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் எஸ்.மோகன் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடைபெற உள்ளது .

மேற்படி இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளிட்ட அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

- ஜனவரி 9-ம் தேதி 2026 அன்று கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சோழவரத்தில் உள்ள பாடி நல்லூர்க்கு வருகை
- மாவட்டம் முழுவதும் விளையாட்டு போட்டிகள் நடத்துதல்.
- திராவிடப் பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம்
- தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள SIR பணிகள்
- கழக ஆக்கப்பணிகள்

**மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.**
செயலாளர், வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

வி.சுதாகர் – சொ. வேலு எம்.சி. முன்னிலை! எழும்பூர் தெற்கு பகுதி

# 58-வது வட்டச் செயலாளர் வி. விஜயகுமார் இல்ல விழா!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு வாழ்த்துகிறார்!

சென்னை,ஜன.7

கழக தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் நல்வாழ்த்துகளுடன் இன்று (7.1.2026) மாலை 7.00 மணியளவில் சென்னை வேப்பேரி, ரிதர்தான் சாலை பி.கே.என். மஹாலில் நடைபெறும் எழும்பூர் தெற்கு பகுதி 58வது வட்ட செயலாளர் வி.விஜயகுமாரின் புதல்வி வி.ஐஸ்வர்யா-வின் பூப்புனித நீராட்டு விழா பகுதி கழக செயலாளர்கள் வி. சுதாகர், சொ.வேலு எம்.சி. முன்னிலையில் நடைபெறுகிறது.

இதில் மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு கலந்துகொண்டு வாழ்த்துகிறார்.

இதில் மேயர் பிரியராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் கழக அமைப்பு செயலாளர் ப.தாயகம் கவி, இ,பரந்தாமன், அ.வெற்றியழகன், ஜோசேப் சாமுவேல், மற்றும் கே.எஸ்.ரவிச்சந்திரன, தமிழன் பிரசன்னா, கோ.ஏகப்பன், கே.எஸ். எம்.நாதன், மாமன்ற உறுப்பினர்கள் ராஜேஸ்வரிஸ்ரீதர், பரிதி இளம்சுருதி, எல். சுந்தராஜன், ஏ..நிர்மலா தேவி, வட்ட கழக செயலாளர்கள் ஆர்.பாபு இ.மொய்தின், டால்பின் அரி,வான்மதி கதிரவன், சி.சேகர், ஆர். எம்.ரங்கநாதன் தி.தயாளன் .வி.அபாய் சு.மனோகர்.நா. பாலு உள்ளிட்ட மாவட்ட பகுதி மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனப் பணிக்காக

# மண்டலம் 9-13 பகுதிகளில் குடிநீர் விநியோகம் நிறுத்தம்!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை,ஜன.7–

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) தேனாம்பேட்டை மண்டலம், மந்தைவெளிப்பாக்கம் ராமகிருஷ்ணா மடம் சாலையில் MRC நகர் குடிநீர் பகிர்மான நிலையத்திற்கு குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குடிநீர் குழாய் இணைக்கும் பணிகளை மேற்கொள்வதால் 08.01.2026 அன்று காலை 10.00 மணி முதல் 09.01.2026 அன்று காலை 10.00 மணி வரை (24 மணி நேரம்) M.R.C நகர் குடிநீர் பகிர்மான நிலையம் தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்படும். ஆகையால் மண்டலம்–9 (தேனாம்பேட்டை) மற்றும் மண்டலம்–13 (அடையாறு)–க்குட்பட்ட கீழ்கண்ட சில பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

மண்டலம் வார்டு எண். பகுதிகள் மண்டலம்–9 (தேனாம்பேட்டை) 116, 120, 119, 121, 124, 125, 122, 123, 126 திருவல்லிக்கேணி (பகுதி), இராயப்பேட்டை (பகுதி), மயிலாப்பூர், சாந்தோம், நந்தனம் (பகுதி), இராஜா அண்ணாமலை புரம், மந்தைவெளிப்பாக்கம் மண்டலம்–13 (அடையாறு) 171 இராஜா அண்ணாமலை புரம் (பகுதி), மந்தைவெளிப்பாக்கம் (பகுதி), சாந்தோம் (பகுதி)

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (DIAL FOR WATER) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் HTTPS://CMWSSB.TN.GOV.IN என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.



"என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனைப்படி துறைமுகம் மேற்கு பகுதி 57 வது வட்டத்திலும் பாக முகவர்கள் கூட்டம் நடைபெற்றது. அனைத்து கூட்டங்களிலும் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் இரா. நரேந்திரன் கலந்து கொண்டு 2026 தேர்தலில் வெற்றிக்கான களப் பணிகளை எடுத்துக் கூறினார்.உடன் பகுதி செயலாளர் எஸ். முரளி, மண்டல குழு தலைவர் பி.ஸ்ரீராமுலு, வட்ட கழக செயலாளர்கள் எம்.ஜெய்சங்கர், பா. கதிரவன், ஆர். ரவிச்சந்திரன், ஜி. ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை, டி. சதீஷ்குமார், வே. பா. பிரபாகரன் மற்றும் பகுதி, வட்ட கழக நிர்வாகிகள்,மாவட்ட பிரதிநிதிகள், அணிகள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை நந்தனம் ஆவின் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு பால்வளக் கொள்கை–2026 தொடர்பான கலந்தாய்வு கூட்டம் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், தலைமையில் 05.01.2026 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில், பால்வளத்துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அ.ஜான் லூயிஸ், , பால்வளத் துறை இணை மேலாண்மை இயக்குநர் திருமதி ச.கவிதா, தனியார் பால்பண்ணை அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.